# கிருபையின் பிரயாணம் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: நீங்கள் இதுவரைக்கும் எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, “என்னால முடியாது! என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது?

**டாக்டர் வேயின் பார்பர்:** ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, “தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்.”

தேவன்  என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக

இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

**அறிவிப்பாளர்:** இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

**பார்பர்:..** அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

**அறிவிப்பாளர்:** ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் Dr. வேயின் பார்பருடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். கிறிஸ்தவர்களை ஊக்குவிப்பவர்களில் சிறந்தவர்களில் ஐவரும் ஒருவர். இது உங்களுக்காக இருக்கலாம். நீங்கள் சொர்ந்வடந்து இருக்கலாம். உங்கள் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை பற்றி நீங்கள் கேட்டு இருக்கலாம். உங்களுக்கு தெரிந்த எல்லா விதத்திலும் அதை முயற்சித்து இருக்கலாம், ஆனாலும் உங்களுக்கு தோல்விதான் மிஞ்சியிருக்கும். கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டும் என்ற உணர்வோடு இருப்பதால், சந்தோஷமே இல்லாமல் போயிருக்கும். அதனால் நீங்க, “ஏதோவொன்று குறைகிறது வேயின் என்றிடலாம்.” நீங்களும் அப்படி இருந்திருக்கீங்க. அதை பற்றி சொல்லுங்க.

**பார்பர்:**..உண்மைய சொன்னா, ஒரு பாஸ்டரா நான் ரொம்ப சொர்ந்துபோயிட்டேன். என்னால எல்லாரையும் திருப்திபடுத்த முடியாது. எல்லாத்தையும் என்னால செய்து முடிக்க முடியுன்னு தோனல. எல்லாரையும் பிரியபடுத்த முடியல. எங்கிட்ட என்ன தப்பு இருக்குன்னு என்னால புரிந்துகொள்ளவே முடியல. ஆனா தேவன் எனக்கு அதை வெளிப்படுத்த துவங்கினார். எங்கிட்ட என்ன இருக்குன்னு எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. அதாவது உங்க வங்கி கணக்கில் மில்லியன் டாலர்கள் இருந்தும் அது உங்களுக்கு

சொந்தமானது என்று உங்களுக்கு தெரியவில்லை. தேவன் எனக்கு கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை நான் புரிந்துகொள்ளாமல் இருந்தேன். உண்மையா, நாம அதை பற்றி நினைக்கும்போதுதான், இதை இன்றைக்கு பார்த்துகொண்டிருக்கிற உங்களில் அநேகர் இதை கவனிக்கவேண்டும், பவுல், இதை இறையியளாலர்களுக்கு எழுதவில்லை. ஒரு பெரிய சபையை நடத்தும் மேய்ப்பர்களுக்கு அவர் இதை எழுதவில்லை. இதை சாதாரண ஜனங்களுக்கு அவர் எழுதுகிறார், பலதரப்பட்ட நிருபங்களை எழுதுகிறார், எபேசியர் மற்றும் கொரிந்தியர் போல. அவர் எப்படி எல்லாவற்றையும் நடைமுறைக்கு ஏற்றார் போல கொண்டுவருகிறார் என்பது ஆச்சரியமளிக்கிறது. அவர் பயன்படுத்தும் வார்த்தை  , நாம், நாம், நாம், நாம், தான் என்றோ, அப்போஸ்தலர்கள் என்றோ இல்லை, நாம் என்றிருக்கிறது. தேவன் ஒருவருக்கும் பட்சபாதம் காண்டுவதில்லை. அவரில் நாம் நம்பிக்கை வைக்க தீர்மானிக்கும்போது அவர் நமது விசுவாசத்தை கனப்படுத்துகிரவராக இருக்கிறார், அதை நாம் பற்றிகொண்டிருக்க முடியும்.

சரி, ஒரு மனுஷன் இருந்தான் - எனக்கு புதிய உடைகளை முயற்சி செய்வது பிடிக்காது. உண்மையா அதை நான் வெறுக்கிறேன், அதாவது, புதிய உடையை முயற்சிப்பதை விட ரூட் கெனால் செய்துகொள்வது மேலானதாக இருக்கும். என்னோட சைஸ், நான் ஆறடி ஆறங்குலம் எனக்கு பொருத்தமான உடையை தெரிந்தெடுப்பது ரொம்ப ரொம்ப

கஷ்டம். ஏ மனைவி என்னிடம் சொன்னாங்க. அவங்க வந்து, “உங்களுக்கு சில உடைகள் வாங்கணும் என்றார்கள். அதனால நாங்க கடைக்கு போனோம். அங்க உயரமான பெரிய உருவமுள்ளவர்களுக்கு ஒரு பகுதி இருந்தது. நாங்க உள்ள போனோம், அப்பா ஒரு நபர் எனக்கு முன்பாக வந்து நின்றார். எனக்கு எந்த பக்கம் போறதுன்னு தெரியல, அவளுக்கும் தெரியல. அவர் என்னை பார்த்தபடி என் அருகில் வந்து கேட்டார், “நீங்க வேயின் பார்பர் தான, நீங்கதான என்றார்.” நான் சொன்னேன் , “எஸ் சார். அதற்கு அவர், “நீங்க ஒருவிஷயத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்றார். அதற்கு நான், என்னது என்றேன்? அதற்கு அவர், உங்க வார்த்தைகள் என்னை ஆசீர்வதித்திருக்கிறது என்றார்.” நான் மனதில் யோசித்தபடி, சரி, நீங்க நான் பாஸ்டரா இருக்கிற சபையின் அங்கத்தினராக இருக்கிறீர்களா என்று கேட்டேன்? அவர் சொன்னார், இல்லை, உங்கள டிவில பார்த்திருக்கேன்.” நா கேட்டேன், நான் சொன்ன எந்த விஷயம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், “நீங்க எப்பவும் இயேசு ஒரு நபராக நமக்குள் வாசம்பன்னுவதை பற்றி சொல்வீங்க, பரிசுத்த ஆவியானவராகிய நபரை பற்றி சொல்வீங்க.” என்று சொன்னபடி, “நான் அதினால் மிகவும் அசைக்கப்பட்டேன், ஆனால் என்னால அதை புரிந்துகொள்ள முடியவில்லை.” என்று சொன்னவர், “இருக்கட்டும், நா தான் இந்த உயரமான நபர்களுக்கான துணி கடையை பார்த்துகொள்கிறேன்

என்றார். நான் நினைத்தேன், இந்த நாள் முடிந்தது. அப்ப டயானா, என்னோட மனைவி, காணாமல் மறைந்துவிட்டாள்.

கொஞ்சம் தூரம் நடந்ததும் அவர் எங்கிட்ட கேட்டார், “எனக்கு அதை புரியும்படி சொல்லமுடியுமா? நாம போட்டிருக்கிற மாதிரி சூட்டும் டையும் அணிந்திருந்தார், நான் கேட்டேன், “உங்க கொட்ட ஒரு நிமிடம் தரமுடியுமா.” அதற்கு அவர் கேட்டார், “இதுக்கு அதுக்கும் என்ன சம்பந்தம் இருக்குது? நான் சொன்னே, “நீங்கதான கேட்டீங்க, என்னால விளக்கி சொல்லமுடியுமா என்று என்றேன்.” அவர் கழற்றி கொடுத்தார். நான் கேட்டேன், “இந்த கோட்ட நீங்க வாங்கும்போது இதை எங்க பார்த்தீங்க? அவர் சொன்னார், என்ன கேள்வி இது? அது ஒரு கடையில் இருந்தது.” நா சொன்னே, “இல்ல,இல்லை, இல்லை, இல்லை, இது கடையில எங்க இருந்தது? அதக்று அவர், “ஹேங்கர்ல தொங்கீட்டு இருந்தது என்றார். நான் சொன்னேன், “நல்லது, இப்ப இங்க கொஞ்சம் வாங்க என்றேன்.” நா ஒரு ஹேங்கர எடுத்து இதை அந்த ஹேங்கர்ல மாட்டி தொங்கவிட்டேன். அப்பறம் அவரிடம் சொன்னேன், “இப்ப, இது பார்வைக்காக இருக்கிறது, அப்படிதானே.” அதற்கு அவர், “நீங்க என்ன பேசறீங்க என்றார், நான் சொன்னேன், இந்த கோட் இப்ப இத்து போறமாதிரி தொங்கீட்டு இருக்குது, இந்த ஹேங்கர்லேயே தொங்கீட்டு இருக்கும், யாராவது வந்து அதை வாங்கி இங்கிருந்து மீட்டாள் தான் அதற்கு விடுதலை. அது தனக்குத்தானே உதவிட முடியாது . நா சொல்றது சரிதானே? ஆமா, சரியென்றார்.”

மேலும் நான், “இதை நீங்க வாங்கும் போது என்ன செயதீங்கன்னு கேட்டேன். இதற்கு எவ்வளவு பணம் கொடுத்தீங்க? அதற்கு அவர், இல்ல, அது ஒரு டீல். நான் இங்க வேலை செய்றேன் என்றார். நான் சொன்னே, இருக்கட்டும், இருந்தாலும் நீங்க இதற்கு ஒரு விலை கொடுப்பீங்க இல்லையா, அபப்டிதானே? - துணி வியாபாரம் செய்கிறவர்களும் ஒரு நாள் தேவனுக்கு முன்பாக வந்து நிற்கணும். - அதற்கு அவர் சொன்னார், நிச்சயம், கொடுப்பேன்.” நா சொன்னேன், “அப்ப, வேற மாதிரி சொன்னா, இந்த கோட் தானா உங்ககிட்ட வரல. நீங்க தான் கோட்ட தேடி போய் அதற்கான உயர்ந்த விலையை கொடுத்து வாங்கியிருக்கீங்க. மற்றவர்களுடைய பார்வைக்கு அது பெரிதாக தெரியாமல் இருக்கலாம், ஆனா நீங்க அதற்கு ஒரு விலை கொடுத்திருக்கிறீங்க. அதற்கு அவர், ஆமா கொடுத்திருக்கேன் என்றார். அப்ப நான், ஓகே, என்று சொல்லி ஹேங்கரில் இருந்து எடுத்து. அவரிடம், “இப்ப இது உங்களுடைய கோட் தானே என்றேன். அவர் சொன்னார், “ஆமா.” நா கேட்டேன், “அது தன்னுடையதா இல்ல உங்களுடையதா என்றேன். அதற்கு அவர் - எதையுமே யோசிக்காம என்னிடம் பதில் சொன்னார் - அவர் சொன்னார், “அது அதுக்கு சொந்தமானதல்ல. அதை விலை கொடுத்து வாங்கியிருக்கிறேன்.” பவுல் கொரிந்தியரில் சொல்வது போன்ற வார்த்தையை அவர் சொன்னார். அவர் என்னை பார்த்து சொன்னார், “இது வசனத்தில்

இருக்கிறது, அப்படிதானே? நான் சொன்னேன், ரொம்ப நல்லது. கம் ஆன், கம் ஆன்."

நா கேட்டேன், இப்ப, அந்த கொட்ட உயர் தூக்கி பிடித்து, நான் கேட்டேன், இது தனக்கு தானே ஏதாவது செய்துகொள்ள முடியுமா? அவர்கேட்டார், நீங்க என்ன சொல்றீங்க? நா சொன்னேன், "அந்த கையை என்னை பார்த்து அசைக்கும்படி சொல்லுங்க நான் செய்ததற்கு எனக்கு நன்றி சொல்ல சொல்லுங்க என்றேன்." அதற்கு அவர், "அந்த கோட்டால தானா எதையுமே செய்ய முடியாது என்றார். நா கேட்டா, அப்படியா! அப்படின்னா, "சரி, அந்த கொட்ட போட்டுக்கோங்க." அவர் அந்த கொட்ட போட்டுகொண்டார் என்னிடம் சொன்னார், ஒரு நிமிடம் இருங்க. இந்த கோட்ட நா விரும்புகிறபடி செயல்பட வைக்க ஒரே வழி நா அதற்குள் நுழைந்துகொள்வது தான் இல்லையா என்றார்." நா சொன்னே, "நீங்க பிடித்துகொண்டீர்கள்." அப்ப அவர் சொன்னார், என்னால பார்க்க முடியுது. நா சொன்னேன், இப்ப, அந்த ஸ்லீவ கைய தூக்க சொல்லுங்கள்." வாவ்! அவர் உயர்த்தினபோது நான் சொன்னே, பாருங்க, இது கோட் பற்றிய விஷயம் அல்ல, கோட்டில் ஜீவன் இருக்கணும் அஹ்றுதான் முக்கியம் என்று சொன்னேன்."

இதுதான் எனக்கு பொருந்துவதாக இருக்கணும், ஜான், என்னக்குள்ள வாழ்றது யாருன்னு எனக்கு தெரியல. நா யாருன்னு எனக்கு புரியாம இருந்துச்சு. அவர் யார் என்பதை நான் புரிந்துகொள்ளவில்லை. என்னிடம் எந்த காரியங்கள் எல்லாம் குறைவாக இருந்ததோ, அவர்

எனக்குள் வந்து வாசம் செய்ய துவங்கியதும் அந்த பகுதிகளை கையாள தேவையான சத்துவத்தி எனக்கு அருளினார். அதுதான் எனக்கு தேவையான செய்து, ஆமா, வசனம் அதை சொல்கிறது. அதனாலதான் பவுலின் வாழ்க்கை முற்றிலும் மருரூபமானது.

**ஆன்கர்பெர்க்:** இன்னும் சிலர் இப்படியாக சொல்லிக்கொண்டு இருபார்கள் , "முதல் ஓரிரு நிகழ்சிகளை பார்க்கவில்லையே என்றிருக்கலாம்." போன வார நிகழ்ச்சியை சுருக்கமாக சொல்லிவிட்டு பிறகு எபேசியரை தொடர்ந்திடலாம். நேயர்கள் என்ன தெரிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறீர்கள், ஏன்னா நாம் அவர்கள் வேதத்தை அறிந்திட விரும்புகிறேன், வேதத்தில் எது எங்க இருக்குது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும், ஏன்னா அவங்க சொல்வாங்க, வேயின், இதுவரைக்கும் நான் இதை கேள்விப்பட்டதேயில்லை." ஆமா, அதாவது, நாம இயேசுவை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆமா, அவர் வாழ்ந்த போது பரிபூரணமான வாழ்க்கை வாழ்ந்தார். ஒருமுறை கூட அவர் பாவம் செய்ததே  கிடையாது. அவருக்குள் அது இருக்கவும் இல்லை. எப்படி நடக்கவேண்டும் என்று அவருக்கு தெரியும். அந்த இயேசு நமக்குள் வாழும்படியாக வந்திருக்கிறார், தேவன் அவரை சிலுவைக்கு அனுப்பி நம்மை மீட்டிருக்கிறார் அதினால் அவர் நமக்குள் வந்து, நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிக்கிறார். நமக்குள் ஜீவனை பெற்றிருக்கிறோம், ஆனால் அந்த ஜீவனை எப்படி பயன்படுத்துவது

என்று நமக்கு தெரியவில்லை. எப்படி கிறிஸ்து நம்மூலம் ஜீவிக்க அனுமதிப்பதேன்று தெரிவதில்லை. அதை பற்றிதான் எபேசியரில் நாம் பார்த்துகொண்டு இருக்கிறோம், அதனால நாம எங்க இருக்கிறோம் என்பதை சுருக்கமாக சொல்லுங்கள்.

**பார்பர்:..**சரி, எல்லாவற்றிற்கும் துவக்கம் ஜெபமாக தான் இருக்கிறது. பவுல் எபேசியர் 3:14ல் கூறுகிறார், “இதன் காரணமாக நான் பிதாவிற்கு முன்பாக முழங்கால் படியிட்டு.” இதற்கு காரணம்  என்ன, பவுல்? “அவர்தான் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுகுடும்பத்திற்கும் நாமக்காரணர்.” இங்க ஒரு வேண்டுதலும் சொல்லப்பட்டு இருக்கிறது, :அவர்தாமே தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி, உங்களுக்கு தமது பரிசுத்த ஆவியினாலே உள்ளான மனிதன் பெலப்படும்படி அனுக்கிரகம் பண்ணவேண்டும் என வேண்டிகொள்ளுகிறேன்.” இப்ப, இந்த பெலப்படும்படி என்ற வார்த்தையின் அர்த்தம் சத்துவமளித்தல் என்பதாகும். இது எனக்கு ஒரு விஷயத்தை சொல்லுகிறது, நா எப்பேர்பட்ட தோல்வியை சந்தித்தாலும் பரவாயில்லை. எனக்குள்ள தேவன் என்னை செய்யும்படி சொல்லுகிற காரியத்தை செய்வதற்கான பெலன் இல்லை. என்னால் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது. எனவேதான் என்னை பெலப்படுத்தும்படி எனக்குள் ஒருவர் வாசம்பன்னுகிறார், எனக்கு சத்துவமளிக்கிறார், அவர் என்னிடத்தில் எதிர்பார்க்கும் காரியத்தை நான் செய்திடும்படி எனக்கு சத்துவமளிக்கிறார். அதுமட்டுமல்ல அவர்

சொல்கிறார், அவருடைய சத்துவத்தினபடி உங்களை பெலபப்டுத்துகிறார்.” நாம, ஏற்கனவே, அளவின்படியே என்பது ஒரு அளவுகோலை குறிக்கிறது என்று ஏற்கனவே பார்த்தோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, இரண்டு கிரேக்க வார்த்தை வச்சிருக்கீங்க. ஏக் என்ற சொல் அடுத்தது காடா என்ற சொல், இது காட்டா என்ற வார்த்தையை குறிக்கிறது. சில மொழிப்பெயர்ப்புகள் இதை தவறாக மொழிபெயர்த்திருக்கின்றன. இதற்குரிய வித்தியாசம் என்ன?

**பார்பர்:**...சரி, இதுல அதிலிருந்து என்பதாக சொல்லப்படுகிறது. அதாவது, எங்கிட்ட மில்லியன் டாலர் பணம் இருக்கிறது அதில உங்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்க விரும்புகிறேன், என்னுடைய செல்வத்தில் இருந்து எடுத்துகுடுப்பதை நீங்க விரும்ப மாட்டீங்க, என்னுடைய செல்வத்தின்படியே உங்களுக்கு கொடுப்பதை விரும்புவீர்கள். அப்ப என்னுடைய பரிசு என்னிடத்தில் இருப்பதை பிரதிபளிக்க வேண்டும். அதுதான், நான் யார் என்று சொல்கிறது. நமக்குள்ள வாழ்கிறவர் யார் என்பதை நமது ஒவ்வொரு செய்கையும் பிரதிபளித்திட வேண்டும். அவர் சொல்கிறார், “நமது உள்ளான மனிதன்.” இங்க நாம பார்த்துகொண்டிருப்பது சாதாரண சரீர பெலன் அல்ல அது ஆவிக்குரிய பெலன், தெய்வீக சத்துவம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இன்றைக்கு நீங்கள் எங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பார்பர்:..**சரி, அவர் நமக்கு கொடுத்ததிற்கும் சில ஐசுவரியங்களை பற்றி நாம் பார்க்க விரும்புகிறேன். ஒரு சிலவற்றை பார்த்தோம். முதல் வசனத்தில் பார்த்தோம்: நாம் அனைவரும் பரிசுத்தவான்கள் என்று பார்த்தோம். எனக்கு அது பிடித்திருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, ஜனங்கள் அதை கட்டாயம் நம்பவேண்டும் என்று அவசியமில்லை, ஏன்னா தேவனை தங்கள் வாழ்வில் ஏற்றுகொண்ட பிறகும் அவர்கள் வாழ்வில் நிறைய பாவங்கள் நடந்திருகிறது. அவங்க கேட்பாங்க, கம் ஆன், என்னை பற்றியா சொல்றீங்க?

**பார்பர்:..**நிச்சயமா, அதை பற்றிதான் பேசிகொண்டிருந்தோம்.

**ஆன்கர்பெர்க்:** ஏன்?

**பார்பர்:..**அவங்க விசுவாசிகள் தானா. ஏன்னா நாம் கிறிஸ்துவை ஏற்றுகொள்ளும்போது, அவருக்குள் நமக்கு, முதலாவதாக, மன்னிப்பு வருகிறது. எதற்காக? கடந்த கால பாவங்கள், நிகழ்கால பாவங்கள், எதிர்கால பாவங்களுக்காக. எல்லாம் பொறுப்பெடுத்து கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் என்ன எதிர்பார்க்கிறார் என்று நாம் அளந்து பார்க்க அவசியமில்லை, ஏன்னா இயேசு நமக்காக அளவிடுகிறவராக இருக்கிறார். ஆனால் நம்முடைய நாம் எப்படி பயன்படுத்துவதென்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பரிசுத்தவான்

என்பது அவருடைய நோக்கத்திற்காக நாம் பிரித்து எடுக்கப்பட்டிருக்கிறோம் என்பதை கூறுகிறது. நீங்க பரிசுத்தவானாகிய ஜான், நான் பரிசுத்தவானாகிய வேயின், ஏன்னா அவருடைய நோக்கத்திற்காக நான் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். நீங்களும் நானும் உயிர்வாழ ஒரே காரணம் அவருக்கு மகிமை செலுத்துவதற்கு தான்.

**ஆன்கர்பெர்க்:** சரி, கடந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் எல்லாம் பார்த்துகொள்ளபப்ட்ட்டது என்றால், என்னுடைய வாழ்வில் இருக்கும் நிகழ்கால பாவங்கள் என்பதன் அர்த்தம் என்ன?

**பார்பர்:..**சரி, அப்பபடின்னா நா மறுபடியும் அவருக்கு முன்பாக வரவேண்டும். அதனாலதான் நாம் அறிக்கை செய்கிறோம். நம்மிடம் இல்லாததை பெறுவது நோக்கமால், ஆனால் நம்முடையதாக இருப்பதை பெற முயலுகிறோம். இன்னொரு விஷயத்தையும் இது நமக்கு செய்கிறது; நமக்கு கிடைக்க வேண்டிய மன்னிப்பு கிடைப்பதோடு சேர்த்து, ஒவ்வொருநாளும் புதிய விதத்தில் அவரோடு நாம் ஐக்கியப்ப்படும்படி புதிதாக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வருகிறோம். ஏனென்றால் நீங்களும் நானும் சகோதரராக இருக்கலாம் - நாம் ஆவிக்குரிய சகோதரர்கள் - ஆனால் ஒருவேளை மாம்ச சகோதரர்களாக இருந்தால், நமக்குள் போதிய ஐக்கியம் உடன்பாடு

இல்லாமல் போகும். ஒரு உறவு இருக்கும், ஆனால் ஐக்கியம் இருக்காது.

அதனாலதான் தொடர்ந்து அறிக்கை செய்கிறவர்களாக இருக்கிறோம். உண்மையில், நம்முடைய மாம்சத்தின் பெலவீனத்தை ஒவ்வொருநாளும் புரிந்துகொள்ளும் விதமாக தேவன் வடிவமைத்திற்குக்கிறார் என நம்புகிறேன். நா எவ்வளவாய் அறிக்கை செய்கிறேனோ, அவ்வளவாய் நான் தேவ கிருபையை பெறுகிறேன் அவர் என்னை மன்னித்து என் வாழ்வில் புத்தம்புதிய காரியங்களை செய்யும்படி அவருக்கு நான் இடமளிக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்தது என்ன?

**பார்பர்:**...சரி, நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள் என்று அவர் நமக்கு காட்டுகிறார். நா பொதுவா ஞாயிறு மத்தியானத்தில் கால்பந்து விளையாடுவது வழக்கம். இதை சொல்றதுக்கு எனக்கு வெறுப்பா இருக்கு, நா அந்த கொடிய என்னோட பெல்ட்ல கட்டிடுவேன், ஆனா அப்படி செய்ய கூடாதுன்னு தெரியும். நா ஹை ஸ்கூல இருந்தப்ப நா தா கடைசி செலக்ட் ஆனேன், ஏன்னா நா ரொம்ப, உயரமா இருந்தேன், கூட்டமா சொன்ன பேச்சு கேட்காத பசங்க இருப்பாங்க. ஒத்துழைப்பு கொடுக்க கிட்டத்தட்ட முப்பது நிமிடங்கள் எடுக்கும். நா ஒழுங்கா இருக்க மாட்டேன். அதனால என்ன தா கடைசி தேர்வு செய்தாங்க.

என்னுடைய சொந்த நண்பர்களால புறக்கணிக்கப்பட்டது என்னை அதிகமா பாதிக்க ஆரம்பித்தது.

இவர் சொல்கிறார், "அவர் நம்மை உலக தோற்றத்திற்கு முன்பாக தெரிந்துகொண்டாராம்." அதாவது, இதை பற்றி விவாதிக்கும் இறையியலாளர்கள் இருக்கிறார்கள். என்னை பொறுத்தவரை இது ரொம்ப எளிதானது. அவர் என்னை புறக்கணிக்கவில்லை. நான் அவரால் புறக்கணிக்கப்படவில்லை. புறக்கணிப்பு உலகத்திற்கு உரியது, அது கிறிஸ்துவில் இல்லை. ஏனென்றால் அவர் நம்மீது கொண்டுள்ள அன்பை ஏற்கனவே நிருபித்துவிட்டார். அவர் ரோமர் நிருபத்தில் சொல்கிறார், நாம் சத்துருக்களாக இருக்கும்போது அவர் நமக்காக மரித்தார். கைவிடப்பட்ட மக்களாக தேவனுடைய சத்துருக்களாக இருந்தோம், ஆனால் நமக்காக சிலுவையில் மரிக்கும் அளவிற்கு அவர் நம்மை நேசித்தார், அதுதான் நேசத்தின் நிருபனமாகும். அவர் என்னை தெரிந்துகொண்டார். அவர் என்னை ஏற்றுகொண்டார். என்னை பொறுத்தவரை இதனுடைய எளிமையை பார்க்கிறேன், இது ஜனங்களுடைய கண்ணோட்டத்தின்படி இறையியல் யுத்தம் அல்ல.

அடுத்து ஐந்தாம் வசனத்தை பார்க்கிறோம், "அவர் நம்மை முன்குறித்திருக்கிறார்." இது ஒரு நல்ல வார்த்தை. அவர் நமக்காக ஏதோவொன்றை முன்னமே ஆயத்தபடுத்தி இருக்கிறார், அதுதான் அவருடைய சுவிகார புத்திரராக சுவிகரித்தல். இந்த கூய்யோதீசியா என்ற வார்த்தை, இதன் அர்த்தம் தேவனுடைய குடும்பத்தில் புத்திரராக

வேறு பிரிக்கப்படுதல் என்பதாகும். இப்ப, இதை சரியான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். நான் என்னுடைய அன்றாட வாழ்க்கை நிலையில் இருந்துகொண்டு இருக்கிறேன். ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, “தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்.” என்னை எப்படியாவது பரிமாற்றம் செய்யமுடிமா.”

ஆனா திரும்பி வருவது என்பது விலையேறபெற்ற ஒன்றாகும், கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதால் அல்ல, அதை பற்றி இப்ப சொல்லல, கிறிஸ்துவுக்குள் யாருடையவர்களாக இருக்கிறோம் என்பது முக்கியம். அவர் நமக்குள் யாராக இருக்கிறார், அவருக்காக நாம் யாருடையவர்களாக இருக்கிறோம். என்னை பொறுத்தவரை ஒரு சராசரி மனிதன் கிறிஸ்தவ வாழ்க்கை என்பதை தன்னை குறித்தது என்று எண்ணுகிறான் என்றால், அவன் எவ்வளவு முயன்றாலும், தோல்வியடைவான், அவன் என செய்தாலும், தோல்வியில் முடியும்.

இப்ப அவ சோர்வின் விரக்தியின் உச்சத்திற்கு வருகிறான், நான் அதை விரக்கதியின் ஆசீர்வதிக்கப்படும் இடம் என்று சொல்வேன். என்னுடைய முடிவிற்கு நான் வந்தபோது என்னால முடியாது என்பதை புரிந்துகொண்டேன், தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்ய துவங்கினேன், "தேவனே, நான் பெலவீனதோடு உமக்கு முன்பாக வருகிறேன். என்னை நான் உம்மிடம் ஒப்புகொடுக்கிறேன், "என்று சொல்லி, "தேவனே, என்னிடத்தில் நீர் எதிர்பார்க்கிற காரியத்தை எனக்குள் இருந்து செய்திடுவீரா, அப்படி சொல்லும்போதுதான் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு ஏற்கனவே அருளப்பட்டவைகளை தட்டி பெறுகிறவர்களாக இருப்போம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம் திரும்ப வந்ததும், மறுபடியும் அந்த வார்த்தைகளை பற்றி பார்க்க விரும்புகிறேன், "நாம் அவருடைய சுவிகார புத்திரர்களாக இருக்கிறோம். அது ஏன் நமக்கு பலத்த பாதுகாப்பை தருகிறது, சரியா. நேயர்களே, இதை தவற விட விரும்பமாட்டீர்கள் என நினைக்கிறேன். தொடர்ந்து இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டிருப்பது Dr. வேயின் பார்பருடன், நாம் கிறிஸ்தவர்களை

பற்றி பேசிகொண்டிருக்கிறோம், நாம எல்லாரும் தான், மாம்சத்தோடு போராடிகொண்டிருக்கிற நம்மை பற்றிதான். பலசமயங்களில் நம்முடைய சொந்த பெலத்தால் கிறிஸ்தவ வாழ்கை வாழ்ந்திட முயலுகிறோம், ஆனால் மோசமான தோல்விகளை சந்திக்கிறோம். நாம என்ன செய்கிறோம் என்று கேட்டால், நம்முடைய கிறிஸ்தவ வாவில் எப்படி கிறிஸ்துவின் வல்லமையை பெற்று தேவன் நமக்கு வைத்திருக்கும் ஜெயத்தை பெற்றுகொள்ளும்படி வாழ்வது என்பதை பற்றி வசனங்களில் இருந்து பார்க்க விரும்புகிறோம். நீங்க சொல்லிகொண்டிருந்த ஒரு வசனத்தை நிதானித்து கவனிக்க வேண்டும். “அவர் நம்மை புத்திரசுகாரத்தினால் புத்திரர்களாக ஏற்றுகொண்டிருக்கிறார், இங்க மறுபடியும் சுவிகாரம் என்ற வார்த்தை வருகிறது. நீங்க துரிதமா அதை சொல்லீட்டு வந்துட்டீங்க. அது ஏன் நமக்கு பலத்த பாதுகாப்பை தருகிறது?

**பார்பர்:..**சரி, அதாவது, விசுவாசியாக இருப்பவர்களை குறிக்கும் இரண்டு வார்த்தைகள் இருக்கிறது. ஒன்று மேலாக பிறக்கப்படுதல்,” ஒரு பிறப்பு உண்டாகிறது. ஆனா இங்க சுவிகரிக்கபடுதல். இங்க சுவிகாரம் என்று சொல்ல காரணம் என்னவென்றால் என்னை பொறுத்தவரை, அவர் இங்க இந்த வார்த்தையை திடமாக பயன்படுத்த காரணம், அந்த கால கலாசாரத்தில், ஒரு பிள்ளையை சுவிகரித்துகொண்டால் அதை யாரும் மறுக்கவே முடியாது.

**ஆன்கர்பெர்க்:** ரோமில்.

**பார்பர்:..**ரோமில் தான். அவங்க அதை புரிஞ்சுக்கிட்டாங்க. எபேசு ரோம சாம்ராஜ்யத்திற்கு கீழ் இருந்தது, அதனால பவுல் என்ன சொல்கிறார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. ரோமானியர்கள் ஒருமுறை யாரையாவது தனது பிள்ளையாக தத்தெடுத்துகொண்டால், அவர்கள் வாழ்நாள் முழுவதும், யாராலும் அதை பிரிக்க முடியாது.

**பார்பர்:..**அது உண்மைதான்.

**ஆன்கர்பெர்க்:** என்ன காரணமானாலும் சரி.

**பார்பர்:..**சரியா சொன்னீங்க. நாம எப்படி தெரிந்துகொள்ளபட்டோம் என்று சொல்கிறேன், அதாவது, அவர் எப்படி தெரிந்துகொண்டார், எப்படி அவர் இதை அனுமதித்தார் - தெரிந்துகொண்டார் என்ற வார்த்தை, இப்படி சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை - அதாவது எபப்டி அவர் நம்மை அவரது குடும்பத்தில் பங்குவகிக்க்கும்படி அனுமதித்தார். எனக்கு பிடித்த ஒரு பாடல் இருக்கிறது, “தேவனுடைய குடும்பத்தில் நாமும் பங்காக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்,” அதாவது, இதை நாம பலமுறை பாடியிருந்தாலும், தேவனுடைய குடும்பத்தில் நாம் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்வதே இல்லையே? உண்மையில், இயேசு நம்முடைய மூத்த சகோதரன். தேவனுடைய குடும்பத்தின்

அங்கமாக நாம் இருக்கிறோம். அவர்தான் முதற் பிறந்தவர். தேவன் நம்மீது காட்டும் அன்பு அது ஒப்பிட முடியாத ஒன்றாக இருக்கிறது. உண்மையை சொன்னால், அவர் நான்காம் வசனத்தில் சொல்லுகிறார், "அன்பினால் அவர் நம்மை சுவிகார புத்திரராக முன்குறித்திருக்கிறார்." அவருடைய அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** அந்த அன்பை பற்றி பேசிடலாமா. இந்த பகுதிகளில் பெரும்பாலான இடத்தில் அன்பு பற்றி சொல்லப்படுகிறது.

**பார்பர்:..**ஆமா நிச்சயமா. குறிப்பாக நான்காம் அதிகாரத்தின் ஜெபத்தில், அவருடைய அன்பை நாம் புரிந்துகொள்ள முடியும்.

**ஆன்கர்பெர்க்:** அதை பற்றி பேசிடலாமா. ஏன் அப்படி சொன்னார்? முதலாவது, அதை வாசிக்கலாம்.

**பார்பர்:..**சரி, மூன்றாம்  அதிகாரத்தில் சொல்லுகிறார், தொடர்ந்து பார்க்கும்போது, அவர் சொல்கிறார், "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, சகல  பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ளுங்கள்" - அதை விவரிக்க முடியாது - நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** விளக்கி சொல்லுங்கள்.

**பார்பர்:..**சரி, அதாவது நா நேசிக்கப்படுகிறேன் என்றால், இந்த அன்பு எல்லாரையும் ஊக்குவிக்கும் என்று நன்றாக தெரியும். இதெல்லாம் தேவனுடைய அன்பின் மிகுதியால் வரும். இது வெட்க உணர்வினால் உண்டாவதில்லை; இது அவமானத்தினால் உண்டாகிற ஒன்றல்ல. மற்ற விஷயங்களினால் உண்டாகிற ஒன்றல்ல. கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்டதும், அந்த தேவனுடைய அன்பு, நாம் செய்கிற ஒவ்வொன்றிலும் நம்மை ஊக்குவித்திடும். நாம் செய்கிற எல்லாவற்றையும், இந்த உண்மையை அறிந்ததினால் தாமாக செய்கிறோம், நான் நேசிக்கபபட்டவன் என்ற உண்மை. தேவன் நம்மை நேசிக்கவேண்டும் என்று சொல்லி நாம் எந்த கிரியையும் செய்யவேண்டிய அவசியமில்லை, தேவன் நம்மை நேசிக்கிறபடியால் நாம் செய்கிற காரியங்களை செய்துகொண்டு இருக்கிறோம். தேவனை பிரியப்படுத்தும் படி நான் எந்த காரியத்தையும் செய்வது கிடையாது. கிறிஸ்துவுக்குள் ஏற்கனவே அவர் நம்மீது பிரியப்படுகிறார். எனவேஇது வாழ்க்கையை குறித்த நமது கண்ணோட்டத்தை முற்றிலும் மாற்றுவதாக இருக்கிறது.

மேலும் ரோமர் 2ன் நான்காம் வசனத்தில் சொல்லுகிறார், அதாவது தேவனுடைய தயவுதான் மனிதனை மனதிரும்பி குணப்படும் படி செய்கிறது என்கிறார். இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாக

இருக்கிறது அதாவது இந்த அன்பு, என்னை ஒருவர் பூரண அன்போடு நேசிக்கிரவராக இருக்கிறார். அதாவது, என்னை முழுமையாக நேசிக்காத அம்மா அப்பா இருக்கலாம், அவர்களில் யாரும் என்னை அதிகமாக நேசிப்பது இல்லை. ஆனால் என்னை பூரண அன்போடு நேசிக்கும் பரம பிதா இருக்கிறார், அவர் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் என்னை நேசிக்கிறார், அவருடைய குமாரன் எனக்குள்ளாக வாசம் பண்ணும்படி வந்திருக்கிறார். நான் எல்லா நேரங்களிலும் நேசிக்கப்படுகிறவனாக இருக்கிறேன். என்னை பொறுத்தவரை ஒரு விசுவாசி இதை புரிந்துகொள்வது ரொம்ப கஷ்டம், இது தெரியாம என்ன செய்தாலும் தோல்விதான்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், வேயின், இது ரொம்ப பயங்கரமாக இருக்கிறது. நாம் புத்திரசுவிகாரம் பெற்றவர்கள் என்று சொல்வதோடு நிற்காமல், நாம் முத்தரிக்கப்பட்டிருக்கிறோம் என்கிறது. சரி, அதை விளக்கிடுங்கள்.

**பார்பர்:**..ஓகே, இதற்கு அர்த்தம் பாதுகாப்பு. அவர் சொல்றயார், "அவருக்குள்" வசனம் 13, எபேசியர் 1, "அவருக்குள், நீங்களும், உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு, விசுவாசிகளானபோது," இப்ப விசுவாசிகளிடம் அவர் பேசுகிறார், " வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். இப்ப, எவ்வளவு காலமாக

முத்திரைபோடப்பட்டவர்கலாக இருக்கிறோம்? சிலர் உங்களுடைய இரட்சிப்பை இழந்திட கூடும் என்று நினைத்துகொண்டு இருக்கிறார்கள். உண்மையாவா? நான்காம் அதிகாரத்திற்கு வருவோம், வசனம் 30, " தேவனுடைய பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள், "இதை கவனிங்க, "மீட்பின் நாளுக்கென்று நீங்கள் முத்திரையாக பெற்றவர். இங்க, விசுவாசிகளிடம் பேசுகிறார். அவர்கள் ஏற்கனவே பாவத்தின் பரிகாரத்தில் இருந்து மீட்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள்தொடர்ந்து பாவத்தின் வல்லமைகளில் இருந்து மீட்கப்பட்டு இருக்கிறார்கள்; ஆனா ஒருநாள் நாம் பாவத்தின் பிரசனத்தில் இருந்து மீட்கப்பட இருக்கிறோம். நாம் அவரோடு இருக்கும்படி எடுத்துகொள்ளப்படும்போது மீட்பின் இறுதி செயல்பாடு சம்பவிக்கும். அதுவரைக்கும் நாம் முத்தரிக்கபட்டவர்களாக இருக்கிறோம். அதாவது, அதுதான் பாதுகாப்பு. இதை விட்டு வேறு எங்கும் போக வாய்ப்பே கிடையாது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், நமக்கு இன்னும் சில நிமிடங்கள் இருக்கிறது. நாம் பேசிகொண்டிருக்கிற காரியங்களை நீங்கள் எப்படி எடுத்துகொள்கிறீர்கள் என்பதை பற்றி சொல்லுங்கள், இதை வீட்டில் இருந்து பார்த்துகொண்டிருக்கும் நேயர்களும், அதை தங்கள் வாழ்வில் அப்பியாசப்படுத்திட உதவியாக இருக்கும்.

**பார்பர்:..**ஓகே, சரி, அதற்கான பதில் இங்க இந்த ஜெபத்தில் இருக்கிறது எபேசியர் 3. வசனம் 19ல் சொல்கிறார், "நீங்க அவருடைய ஆவியினாலே உங்கள் உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்பட, அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படி உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும் என்று வேண்டிகொள்ளுகிறேன்.: - இப்ப, உலகத்தில் இந்த உள்ளான மனிதன் எங்கு இருக்கிறான்? - கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கும்படி." அவர் உள்ளான மனிதனை இருதயத்தோடு ஒப்பிடுகிறார், நாம் செய்கிற எல்லாவற்றின் மையப்பகுதி இதுதான். நம்முடைய வாழ்வை கட்டுபடுத்தும் கோட்டையாக இருக்கிறது. எல்லாமே அதைசுற்றிதான் அமைந்திருக்கிறது. "விசுவாசத்தினாலே நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகிடுங்கள்." விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாழ இடமளித்திடுங்கள். இந்த காடோய் கியோ என்ற வார்த்தை, அவர் உங்களுக்குள் வாசன் பண்ண இடமளிப்பதை குறிக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, இதை பற்றி அடுத்த வாரம் அதிகமாக பார்க்க இருக்கிறோம். கிறிஸ்துவுடன் இதை நீங்கள் துவங்கியபோது, அதாவது, நீங்க அங்க நேர்த்தியாக எதையும் செய்யவில்லை. இன்னும் நாம பூரணபடாமதா இருக்கிறோம், இல்லையா. ஒவ்வொருநாளும் இந்த வாக்குத்தத்தங்களை உபயோகிப்பதை பற்றி சொல்லுங்கள்.

**பார்பர்:..**முதலாவதாக, நீங்கள் யாராக இல்லை என்பதை ஒப்புகொள்ள வேண்டும். கிறிஸ்து இல்லாமல் நீங்கள் எப்படி இருக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.அவருக்கு எல்லாவற்றிலும் சரி என்று சொல்ல கற்றுக்கொள்ளுங்கள். அதாவது, ஜான், அவருடைய வார்த்தையில் நான் இல்லாவிட்டால் என்னால் அவருக்கு சரி என்று சொல்ல முடியாது. ஆனா நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது, அதை நாம் புரிந்துகொள்ள ஒரே வழி அவருடைய வார்த்தை தான். இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களில் யாராவது போராட்டத்தோடு தோல்வியில் தத்தளித்துகொண்டிருந்தால், எபேசியர் புத்தகத்தை வாசிக்கும்படி சொல்கிறேன். அந்த ஜெபத்தோடு துவங்கிடுங்கள், இதை புரிந்துகொள்வதில் உங்கள் பங்கும் உண்டு, ஆனா வசனங்கள் மூலம் ஒன்றை கற்றுகொள்வீர்கள், சரி என்று சொல்வது. எஸ், லார்ட், ஆம் தேவனே, ஆம் சரி, ஆண்டவரே.” அவருக்கு நாம் சரி என்று சொல்ல கற்றுகொள்ளும்போது, அதுவே திறவுகோலாக மாறுகிறது. நீங்க ஆரம்பிங்க, நிச்சயமா சில இடங்களில் தோல்விகள் வரலாம், ஆனா எங்கிருந்து பிரிந்து போனீங்களோ அங்கையே ஹ்டிரும்ப வந்து நில்லுங்க அதுவே அவருக்கு சரின்னு சொல்கிறதை பிரதிபளிக்கும் நிலையாக மாறி வளர துவங்கிடுவீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும் என்று நீங்கள் வலியுறுத்துவது எனக்கு பிடித்திருக்கிறது. வேறுவிதமாக சொன்னால், நீங்க திறந்த மனதோடு தேவனுக்கு முன்பாக வந்து சொல்லணும், “தேவனே, எனக்கு கற்றுத்தாரும்,” நிச்சயமாக வேதாகமம் எல்லா சூழ்நிலைகளிலும் நின்று உங்களுக்கு போதிக்க துவங்கிடும். அதாவது, அது ஜீவனுள்ளது; அது நிச்சயம் உங்களோடு பேசக்கூடிய ஒன்றாக இருக்கிறது, சரியா. ஒரு பகுதியை மட்டும் எடுத்து சொல்லுங்கள், “ஆண்டவரே, இந்த காரியத்தில் நான் போராடிகொண்டிருக்கிறேன். என்னில் கிரியை செய்திட துவங்கிடும். என் விருப்பங்களை மாற்றிடும். மேலும், ஆண்டவரே, இந்த காரியத்தில் உமக்கு கீழ்படிய விரும்புகிறேன். என் மூலமாக இங்கே வாசம்செய்யும்.”

அதுமட்டுமல்ல, அனுபவங்கள் மூலமாக, தேவன் உங்களை மாற்றிகொண்டிருப்பதை உங்களால் பார்க்க முடியும், சரியா. அதாவது, சில காரியங்களை நீங்கள் அசாத்தியமானவை என்று நினைத்திருக்கலாம் இன்னும் சில காரியங்கள் அசாத்தியமாக இருக்கலாம், நீங்கள் ஒருவேளை, “தேவனே, என்னில் கிரியை செய்யும் என்று சொல்லிகொண்டிருக்கலாம்.” தேவன் அந்த ஜெபங்களுக்கு பதிலைப்பது ஆச்சரியமாக இருக்கும், அவர் நம்மை நேசிக்கிறார். ஒரு அப்பா பிள்ளையிடம் பேசுவது போல நடந்திடுவார். “பாறு, உனக்கு உதவிட தான் நான் இருக்கிறேன்.”

**பார்பர்:..**நிச்சயமாக.

**ஆன்கர்பெர்க்:** ஓகே. ஆல்ரைட், சரி, நேயர்களே, நாம் பேசிகொண்டிருக்கும் காரியங்களை பற்றி அடுத்த வாரமும் தொடர்ந்து பேசிடலாம், உள்ளான இருதயத்தில், உங்கள் இருதயத்தின் ஆழத்தை இயேசு தமது வீடாக உணர்ந்திடட்டும், சரியா. அவரை நீங்கள் எப்படி சவுகரியமாக வைத்துகொள்ள முடியும்? அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.